# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
# புதுச்சேரி

## ஊரக வேலை உறுதித்திட்டப் பணியாளர்கள் தேர்வு செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் புதுச்சேரி மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் "கிராம வேலை உறுதித்திட்டப் பணியாளர்களை (GRS)" நியமிப்பதற்காக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் புதுச்சேரி மாவட்டத்தைச் சேர்நத **ஊரகப்பகுதியில் (வில்லியனூர் அல்லது அரியாங்குப்பம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குட்பட்ட கிராமங்களில்) வசிப்பவராக இருத்தல் வேண்டும். பணி நியமனம் தற்காலிகமானது. மாத தொகுப்பு ஊதியம் ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). விண்ணப்பதாரர்கள் மேல் நிலை வகுப்பில் (H.Sc) தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்.**

2. மேலே குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் ஒரு முழு வெள்ளைத்தாளில், கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து " **திட்ட அதிகாரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுவை வீட்டு வசதி வாரிய கட்டிடம், 2வது மாடி, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605 005" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அஞ்சல் உறைமீது " ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர் தேர்வுக்கான விண்ணப்பம் " என்று குறிப்பிட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள வந்து சேர வேண்டிய கடைசி நாள் 12.02.2009 மாலை 4.00 மணி, தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டா.**

3. பெறப்பட்ட விண்ணப்பங்கள் கிராம பஞ்சாயத்துவாரியாக பிரிக்கப்பட்டு, விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

# மாதிரி விண்ணப்பப் படிவம்

## ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர் பணிக்கு விண்ணப்பம்

விண்ணப்பதாரரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டவும்

1. விண்ணப்பதாரரின் பெயர் :
2. தகப்பனார் பெயர் :
3. பிறந்த தேதி (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) :
4. கல்வித் தகுதி (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) :
5. பாலினம் : ஆண் / பெண்
6. பிரிவு - ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பொதுப் பிரிவினர். :

| ஆ.தி. | ப.கு. | மி.பி.வ. | பி.வ. | பொதுப் பிரிவினர் |
|---|---|---|---|---|
| | | | | |

7. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டவரா? : ஆம் / இல்லை

   ஆமெனில் பதிவு எண் மற்றும் நாள் (பதிவுச்சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) :
8. விண்ணப்பதாரர் வசிக்கும் கிராம பஞ்சாயத்தின் பெயர் :
9. வட்டாரம் :
10. தொடர்புக்கான முகவரி :

### <u>ஊறுதி மொழி</u>

........................................(விண்ணப்பதாரரின் பெயர்) த/பெ ..................................................... (தந்தை பெயர்) ஆகிய நான் மேலே குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையென உறுதி அளிக்கின்றேன் மேலும் ஊரக வேலை உறுதித் திட்ட பணிக்காக தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் மாத தொகுப்பு ஊதியம் ரூ.2,000/- என்பதை அறிவேன் என்றும், ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் எனக்கு அளிக்கப்படும் பணிகளை திட்ட விதிகளின் படி சிறந்த முறையில் செயலாற்றுவேன் என்றும் உறுதி அளிக்கின்றேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம் :

நாள் :